# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 4 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் அக்டோபர் 2007

இலவசம்

# இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்



# முயிஸ் புதிய செயலாளர்



சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் (முயிஸ்) புதிய செயலாளராக ஹாஜி அப்துல் ரஸாக் பின் ஹஸன் மரைக்கார், வயது 53, பொறுப்பேற்றுள்ளார். முஸ்லிம் விவகார அமைச்சரின் நியமனத்தை தொடர்ந்து 1 ஜுன் 2007 அன்று அவர் பதவியேற்றார். அதே நாளில் சையது ஹாருன் பின் முஹம்மது அல்ஜுனைட், வயது 60, செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**சையது ஹாருன் அல்ஜுனைட்**



சையது ஹாருன் பின் முஹம்மது அல்ஜுனைட் 14 ஆகஸ்டு 1987-லிருந்து முயிஸ் செயலாளராகப் பணியாற்றி வந்தார். 20 ஆண்டு காலம் அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி கடந்த மே 16 அன்று முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் சமூக வளர்ச்சி அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் மதிய விருந்தளித்தார்.

முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் அஹமது மாத்தார், சமூக வளர்ச்சி, இளையர்- விளையாட்டுத்துறை அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் முயிஸ் அதிகாரிகள் விருந்தில் கலந்து கொண்டனர். இஸ்லாமிய சமய மன்றத்தின் முன்னைய தலைவர்கள் ஹாஜி ஜைனல் ஆபிதின் ரஷீத், ஹாஜி மாரூஃப் சாலே, தற்போதைய தலைவர் ஹாஜி முஹம்மது அலமி ஆகியோருடன் அவர் பணியாற்றியுள்ளார்.

செயலாளர் என்ற முறையில் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முக்கிய தூணாக முயிஸ் வலுவும் வளர்ச்சியும் பெறுவதற்கு சையது ஹாருன் குறிப்பிடத்தக்க பங்காற்றினார். வகஃப் சொத்து, முயிஸ் சொத்து மேம்பாட்டுப் பிரிவு, வாரிசு முதலீட்டு நிறுவனம், கணினி நவீனமயம் மற்றும் ஜகாத் வசூலிப்பு முறை ஆகியவற்றிலும் அவர் முக்கிய பொறுப்பு வகித்தார்.

**ஹாஜி அப்துல் ரஸாக் ஹஸன் மரைக்கார்**

முயிஸ் தலைவரும், ஊழியர்களும் ஹாஜி அப்துல் ரஸாக் ஹஸன் மரைக்காரின் நியமனத்தை வரவேற்றனர். அரசாங்கத் துறை சேவையிலும் முஸ்லிம் விவகாரங்களிலும் இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றவர் அவர். சமூக வளர்ச்சி, இளையர்-விளையாட்டுத்துறை அமைச்சின் (முஸ்லிம் விவகாரங்களுக்கான) சமூக உறவுப் பிரிவின் மூத்த துணை இயக்குநராகப் பணிபுரிந்தார். அதற்கு முன், இளையர் விவகாரங்களுக்கான அதிகாரியாகவும், 1 ஏப்ரல் 2007 முதல் முயிஸ் அலுவலகத்தில் நியமன அதிகாரியாகவும் இருந்தார்.

முயிஸ் தலைவரும் ஊழியர்களும், செயலாளர் பதவியை ஏற்றுள்ள ஹாஜி அப்துல் ரஸாக்கிற்கு நல்வரவும், பதவியிலிருந்து ஓய்வு பெறும் சையது ஹாருனுக்கு மனம் கனிந்த பிரியாவிடை வாழ்த்தும் கூறினர்.

# முஸ்லிம்கள் உறுப்பு தானம் செய்யலாம்
# சுகாதார அமைச்சுடன் முயிஸ் ஒத்துழைக்கும்

சிங்கப்பூர் முஸ்லிம்கள் உறுப்பு தானம் செய்யலாம். அதற்கு எவ்விதத் தடையும் இல்லை என முஃப்தி அறிவித்துள்ளார். மனித உறுப்பு மாற்றுச் சட்டம் முஸ்லிம்களுக்கு இதற்கு முன் விலக்களித்திருந்தது.

சிறுநீரகங்கள், இதயம், கல்லீரல், விழித்திரை ஆகியவற்றை உயிரிழக்கும் தருணத்தில் சிங்கப்பூரர்கள் தானமாக வழங்க அனுமதிக்கும் சட்டமே ஹோட்டா (HOTA) எனப்படும் உறுப்பு மாற்றுச் சட்டம்.

ஹோட்டா சட்ட நடைமுறைகளைப் பரிசீலித்த ஃபத்வா குழு, மற்ற சிங்கப்பூரர்களைப் போன்றே முஸ்லிம்களும் உறுப்பு தானம் செய்யலாம் என முடிவு செய்தது.

இநத மாற்றம் இஸ்லாமிய நெறிமுறைகளுக்குப் புறம்பானது அல்ல. உறுப்பு தானத்திற்கு இஸ்லாம் தடைவிதிக்கவில்லை என்று முஃப்தி தெரிவித்தார்.எனினும், உறுப்பு தானம் செய்யவிரும்பாத முஸ்லிம்கள் அதனைத் தெரிவித்துவிட அனுமதி உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

உறுப்பு மாற்றுச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதால் முஸ்லிம்களுக்கு அனுகூலம் உண்டு. காரணம், மாற்று உறுப்புகளைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் 541 நோயாளிகளில் 20 விழுக்காட்டினர் முஸ்லிம்கள். அவர்களில் 2% மட்டுமே உறுப்பு தானம் பெறும் நிலையில் உள்ளனர்.

## வரவேற்பு

இஸ்லாமிய சமய மன்ற ஃபத்வா குழுவின் இந்த முடிவை சுகாதார அமைச்சு வரவேற்றுள்ளது. முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிமும் ஃபத்வா குழுவின் முடிவை பெரிதும் வரவேற்பதாகக் கூறியிருக்கிறார்.

உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து முஸ்லிம்களை ஊக்குவிக்கும் பொது நிகழ்ச்சிகள் இடம்பெறும் என்று அமைச்சர் தெரிவித்தார். ஆகஸ்டு மாதம் எல்லா பள்ளிவாசல்களிலும் ஹோட்டா சட்டம் குறித்த உரை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மனித உறுப்பு மாற்றுச் சட்டம் தொடர்பான தவறான எண்ணங்களைப் போக்கும் வண்ணம் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் சமய அமைப்புகள் ஈடுபடும் என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

3.8.2007 வெள்ளிக்கிழமை தொழுகையின் போது பள்ளிவாசல்களில் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் இயக்க அறிக்கை படிக்கப்பட்டது. ஹோட்டா சட்டத்தின் தொடர்பில் சுகாதார அமைச்சுடன் முயிஸ் இணைந்து செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடல் கடந்து
# கல்விப் பணியும், சமுதாயப் பணியும்

சிங்கப்பூர்த் தமிழ் முஸ்லிம்களின் சமுதாய நலன்களுக்கும் பாடுபட்டு வருபவரும், இந்திய மாணவர்களின் கல்வி உயர்வுக்கு நல்ல பங்களிப்பு செய்தவரும், இந்திய முஸ்லிம் பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவருமான மு.அ. மசூது தமிழ் நாட்டின் கடையநல்லூரில், ரியாலுஸ் ஸாலிஹாத் என்னும் பெயரிலான மகளீர் அரபிக் கல்லூரி மூன்றுமாடிகளாக விரிவாக்கம் பெற பெரிதும் உதவியுள்ளார்.



சுமார் 600 மாணவிகள் ஆலிமா பட்டக்கல்வியைப் பெறுவதற்கான வசதியுடைய மகளிர் அரபிக்கல்லூரியை 6-6-2007ஆம் நாள் அன்று, அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்துப் பேசிய மு.அ. மசூது, கல்லூரி காலத்திற்கேற்ற கல்வி, சமூகப் பொருளியல் சிந்தனைகளைப் பயிற்றுவிக்கும் கல்விப்பாசறையாக விளங்கும் என்று குறிப்பிட்டார். பெருமளவில் திரண்டிருந்த மக்களிடையே பேசிய அவர், சிறுபான்மை மக்களாக வாழும் நாம், சகோதரத்துவத்தையும், சகிப்புத்தன்மையையும் நமது உயிர் மூச்சுகளாகப் பேணிக்காக்க வேண்டும் என்றும் அப்பொழுதுதான நாம் நமது தனித்தன்மையை வெளிப்படுத்த இயலும் எனக் கோடி காட்டினார்.



சிங்கப்பூருக்கும், இந்தியாவிற்கும் இடையே வலுப்பெற்று வரும் கல்வி, கலாசாரப் பரிமாற்றத்தின் ஒரு முயற்சியாகக் கருதப்படும் இக்கல்விப்பணி அளவில் சிறிதாக இருந்தாலும் ஒரு ஆக்ககரமான பங்களிப்பு ஆகும். இதன்மூலம், நூற்றுக்கணக்கான தமிழ் முஸ்லிம் பெண்கள் பட்டக்கல்வி பெற்ற ஆலிம்களாக தேர்ச்சி பெற உதவப்பட்டுள்ளது. அத்தோடு கணினியிலும், கைத்தொழிலும் தேர்ச்சி பெற்று, பிற்கால வாழ்க்கையை வெற்றிகரமான வாழ்க்கையாக அமைத்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

விரைவாக மாற்றங்கண்டுவரும் உலகில் ஒவ்வொரு சமூகத்தினரும் தங்களது மரபுகளையும், பண்பாடுகளையும் பேணிக்காப்பது மிக அவசியம் என வலியுறுத்தும் மு.அ. மசூது, பூர்வீக நாட்டோடு தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதன்மூலம் இத்தனித்தன்மையைக் கட்டிக்காக்கவியலும் என அழுத்தம் திரத்தமாகக் குறிப்பிடுகிறார்.

கடையநல்லூரின் ரியாலுஸ் ஸாலிஹாத் மகளிர் அரபிக் கல்லூரியின் விரிவாக்கப் பணி தவிர்த்து, சிங்கப்பூரிலும், தமிழ் நாட்டிலும் உள்ள ஏழைச் சிறார் இல்லங்கள், அனாதை காப்பகங்கள் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்கி வரும் மு.அ. மசூது சிங்கப்பூர் இந்திய கல்விப பரிமாற்றத் திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# முத்திரை மொழிபெயர்ப்பாளர் ஹாமீம் முஸ்தபா



சிங்கப்பூர் வானொலி ராஃபிள்ஸ் 150-ஆம் ஆண்டு நினைவாக 1969-ல் சிறுகதைப் போட்டியை நடத்தியது. அன்றைய முன்னணி எழுத்தாளர்களும் இளம் எழுத்தாளர்கள் பலரும் போட்டியில் கலந்து கொண்டனர். வானொலி தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் தலைவர் அ.முருகையன், கலாசார அமைச்சின் உயரதிகாரி வை.திருநாவுக்கரசு, தமிழ் முரசு துணை ஆசிரியர் ஜே.எம்.சாலி ஆகிய மூவரும் நடுவர்கள்.

முதல் பரிசைப் பெற்றார் இளம் பத்திரிகையாளர் ஹாமீம் முஸ்தபா. தமிழ் மலர், தமிழ் முரசு இதழ்களில் பல ஆண்டுகள் பணியாற்றியவர் அவர், அடுத்தடுத்து பல போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை வென்றார். நாகப்பட்டினத்தில் பிறந்து, பிள்ளைப் பருவத்திலேயே தந்தையாருடன் சிங்கப்பூருக்கு வந்தவர் அவர்.

நல்ல வாசகராக இருந்த முஸ்தபா படிப்படியாக மொழி. இலக்கியத் திறனை வளர்த்துக் கொண்டு சிங்கப்பூர் இதழ்களில் எழுத் தொடங்கினார். கதை, கவிதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு, மேடைப் பேச்சு என எந்தத் துறையையும் இந்த பி. எச். முஸ்தபா விட்டுவைக்கவில்லை. சிங்கப்பூரில் 1960-களிலிருந்து வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களில் கட்டுரைகளையும் கவிதைகளையும் அவர் எழுதிக் குவித்தார்.

சிங்கப்பூரில் 1964-ல் தொடங்கப்பட்ட தமிழ் மலர் இதழின் உதவி ஆசிரியராகச் சேர்ந்து செய்தித் துறை அனுபவங்களைப் பெற்றார்.அடுத்து சிங்கப்பூர் தமிழ் முரசு இதழில் சில ஆண்டுகள்.அடுத்து அரசாங்க மொழி பெயர்ப்புத் துறையில் நீண்ட காலப் பணி. இடையிடையே வானொலி, தொலைக்காட்சி செய்திப் பிரிவில் பகுதிநேர மொழிபெயர்ப்புப் பணிக்கு அழைக்கப்பட்டார்.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை மொழிபெயர்ப்பை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தார் ஹாமீம் முஸ்தபா. சில ஆண்டுகளாக உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டிருந்த அவர், இறை நாட்டப்படி 5.7.2007 அன்று சிங்கப்பூரில் உலக வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார். அவருடைய மறுமைச் சுகத்துக்கு இறைஞ்சுவோம்.

- 'நாடி' ஆசிரியர் குழு

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்



36th Mosque Council Meeting at Kampung Siglap Mosque on 14 Apr 07



Courtesy Call to Archbishop of Canterbury on 11 May 07 at Garden Hotel



Delegation from ASEAN Regional Forum ISM CTTC on 4 May 07 at Harmony Centre



Homestay Across Communities Programme at Harmony Centre on 19 May 07



Indian Muslim Community Steering Committee Appreciation Dinner Bencoolen Mosque on 16 May 07



Indian Muslim Community Steering Committee Appreciation Dinner Bencoolen Mosque on 16 May 07



Maulid Celebration 1428H at Woodland Stadium on 1 Apr 07



Public Talk by Muhammad Sammak Counselor to the Mufti of Lebanon on 14 May 07 Raffles Town Club

# அல்-அமீன் பள்ளிவாசல் இந்திய முஸ்லிம் மத்ரஸாவின் பன்முனைப் பணிகள்



*ஹாஜி T.O. சுல்தான், அல் அமீன் பள்ளிவாசல் நிர்வாகக் குழு உறுப்பினர்*

மஸ்ஜித் அல்-அமீனில் (தெலுக் பிளாங்கா) இயங்கி வரும் இந்திய முஸ்லிம் மத்ரஸா பல வகுப்புகளை சிறப்பாக நடத்தி வருகிறது. வார இறுதியில், குர்ஆன் ஓதும் வகுப்புகள் இடம் பெறுகின்றன.சனிக்கிழமைகளில் நடத்தப்படும் அந்த வகுப்பில் இளையர்களுக்கு குர்ஆன் ஓதும் முறையும், தஜ்வீதும் கற்றுத்தரப்படுகிறது. இஸ்லாமிய வரலாறு தகவல் சாதன உதவியுடன் உற்சாகமான முறையில் கற்பிக்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை தோறும் தஜ்வீது மற்றும் ஹதீது பயில்கின்றனர்.

இம் மதரஸாவின் மாணவர்கள் பாடங்களுடன் புறப்பாட நடவடிக்கைகளிலும் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர். அல் அமீன் பள்ளிவாசலில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திய முஸ்லிம் மௌலுது ரசூல்- மீலாது கொண்டாட்டத்தில் பங்கேற்கின்றனர். புறப்பாட நடவடிக்கைகளில் ஒன்றான மதரஸாக்களுக்கு இடையிலான 2006 புதிர்ப் போட்டியில் மஸ்ஜித் அல் அமீன் மாணவர்கள் வெற்றி பெற்று பரிசுகளைக் குவித்தனர். அதான்-பாங்கு சொல்லும். போட்டியிலும் இம் மதரஸா மாணவரே வெற்றி பெற்றார்.

அல் அமீன் பள்ளிவாசல் கடந்த ஆண்டு சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் மதரஸாக்களுக்கு திலாவத்துல் குர்ஆன் போட்டியை சிறப்பாக நடத்தியது. தனது மாணவர்களுக்கான உள்முகாம்களையும் மதரஸா அல் அமீன் நடத்தி வருகிறது. 2006-ல் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்ற முகாமில் இஸ்லாமியக் கல்வியுடன் நகைச்சுவை உணர்வுடைய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவற்றுடன், பொதுமக்களுக்கான பல வகுப்புகளையும். மஸ்ஜித் அல் அமீன் ஏற்பாடு செய்துள்ளது. அவற்றில் அனைவரும் பங்கேற்றுப் பயனடையலாம். திங்கட்கிழமை மாலைதோறும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு உஸ்தாத் ஜலீல், பொருள் நயத்துடன் இனிமையாக ஓதும் முறையை கற்பித்து வருகிறார்.

உஸ்தாத் அப்துல் மாலிக் அவர்கள் ஞாயிறுதோறும் பிற்பகலில் அரபு வகுப்பை நடத்துகிறார். தொடக்கநிலை மற்றும் இடைநிலை வகுப்புகள் இடம்பெறுகின்றன. தற்கால அரபு மொழி நடை, திருக்குர்ஆன் அரபு மொழி வளம் ஆகியவை எழுதவும், பேசவும் கூடிய முறையில் போதிக்கப்படுகிறது.

மஸ்ஜித் அல் அமீன் இந்திய முஸ்லிம் மதரஸாவின் உஸ்தாத் அப்துல்லா உஸ்மான் இந்த வகுப்புகளுக்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறார்.15 ஆண்டுகளாக இங்கு போதித்துவரும் அவர், சிறந்த மாணவர் அணியை உருவாக்கியுள்ளார்.

பயன்மிக்க பல நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்.அவருடைய நற்பணி பெருமிதத்திற்குரியது என மதரஸா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# மலபார் பள்ளிவாசல்
# கேம்ப் ஷுக்கூர் முகாம் நடவடிக்கைகள்

புதுமணத் தம்பதிகளுக்கு மிக முக்கிய நாளாகக் கருதப்பட்ட 07.0707 அன்று மலபார் பள்ளிவாசல் இளையருக்காக கேம்ப் ஷுக்கூர் ஏழாவது முகாமைத் தொடங்கியது. 8 முதல16ஆம் தேதி வரை நடைபெற்ற அந்த முகாமின் முக்கிய கருப்பொருள், தொழில் முனைப்பு .இப்பள்ளி வாசலின் 11- வது நிகழ்ச்சி இது.



மலபார் பள்ளிவாசல் நிர்வாகக் கழக உறுப்பினர்களும் தொண்டூழியர்களும் கேம்ப் ஷுக்கூர் முகாமை நடத்த 2005 ஜனவரியில் முடிவு செய்தனர்.

அதன் நோக்கங்கள் இஸ்லாமியக் கடமைகளை கலகலப்பான செயல்முறைகள் மூலம் சிறார்களுக்குக் கற்பிக்க வேண்டும். நோக்கம். அவர்களின் தன்னம்பிக்கையையும், சுய திறனையும் மேம்படுத்த வேண்டும் பள்ளிவாசலுக்கு அவர்களை ஈர்த்து, அதன் மீது அவர்களின் பிணைப்பைப் பெருக்க வேண்டும். இவையே முகாமின் குறிக்கோள்.

இந்த முயற்சி வெற்றி பெறுமா என்ற சந்தேகம் தொடக்கநிலையில் இருந்த போதிலும், இறையருளால் வெற்றிகரமாக செயல்படுத்த முடிந்தது குறித்து பள்ளிவாசல் நிர்வாகக் குழு மகிழ்ச்சி தெரிவித்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் 30 சிறார்கள் பங்கேற்றனர். சுமார் 20 மாணவர்கள் வெளிப்புற நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பை எதிர்பார்ததுக் காத்துள்ளனர். 80% இளையர்கள் ஏழு முகாம்களில் தொடர்ந்து கலந்து கொண்டனர்.



தொணடூழியர்களான ஆசிரியர்கள், நிபுணர்கள் மற்றும் பள்ளிவாசல் இமாம்கள் முகாமை முன்னின்று நடத்துகின்றனர். இஸ்லாமின் ஐந்து தூண்களான அடிப்படைக் கடமைகளை போதிப்பது முதல் இரண்டு நிகழ்ச்சிகளின் முக்கிய இடம் பெற்றது. முஸ்லிகளின் இறை விசுவாசம், வெளிப்புறக் கல்வி போன்ற நடவடிக்கைகளும் முகாமின் இலக்குகளில் அடங்கும். புக்கிட் சண்டு, புலாவ் உபின், ஆர்க்கிட்வில் ஆகிய இடங்களில் அந்த நடவடிக்கைகள். இடம் பெற்றன.

பல இன மக்கள் வாழும் நாட்டில் முஸ்லிம்களின் பங்கு குறித்தும் ஒரு முகாமில் விவாதிக்கப்பட்டது. முஸ்லிம் அல்லாதவர்களும் அதில் கலந்து கொண்டனர்.

பதின்ம வயதினருக்காக 2006 முகாமில், பயங்கரவாதம் போன்ற தலைப்புகள் விவாதிக்கப்பட்டன. ரமலான் நோன்பு, .குர்பானி ஆகியவற்றில் அவர்கள் பங்கேற்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அண்மைய முகாமின் ஒருபகுதியாக. சிறார்கள் ராபின்சன் ரோடு வழக்குரைஞர்

அலுவலகம், சிராங்கூன் ரோடு மருத்துவர் ஒருவரின் மருந்தகம் ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அந்தத் தொழில்முறைகளைப் பற்றி அவர்கள் அறிந்து திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அதன் நோக்கம்.

புகழ் பெற்ற முஸ்லிம் மருத்துவரான இப்னு சினாவைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. விஸ்மா மெண்டாக்கியையும் கேம்ப் ஷுக்கூர் இளையர்கள் பார்வையிட்டு தொண்டூழியப் பணிகள் குறித்து விளக்கம் பெற்றனர்.

இரண்டே ஆண்டுகளில் மலபார் பள்ளிவாசல் இளையர்களுக்கான பல நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக செயல்படுத்தியுள்ளது. எதிர்காலப் முகாம்கள் பற்றியும் பரிசீலித்து வருவதாக நிர்வாகக் குழு 'நாடி' இதழிடம் தெரிவித்தது. அதிக இளையர்களை எட்டும் வகையில் மற்ற முஸ்லிம் அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதும் அதில் அடங்கும். இதுவரை முகாம்களுக்கு இளையர்களிடம் $10 வீதம் கட்டணம் பெறப்படுகிறது. அதே சமயம் ஏற்பாட்டாளர்கள் $100 வீதம் அவர்களுக்குச் செலவிடுகின்றனர். வரும் மாதங்களில் தொண்டூழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் மலபார் பள்ளிவாசல் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

## சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஏற்பாட்டில்

# அன்னையர் தினக் கொண்டாட்டம்

"அன்னையர் காலடியில் சுவனம் உள்ளது"- நபிமொழி. அன்னையரை அரவணைப்பவரே சொர்க்கத்துக்குத் தகுதியுடையவர் என்ற அடிப்படையில் அன்னையர் தின சிறப்பு நிகழ்ச்சியை தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் நடத்தியது.

இந்நிகழ்சசியில்150-க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.அனைவரும் சிறப்புப் பேருந்துகளில் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சிங்கப்பூரின் இயற்கைப் பாரம்பரிய இடங்களான லாப்ரடார் பூங்கா, மலாய் மரபுடமை நிலையம், சுல்தான் பள்ளிவாசல் ஆகிய பழம்பெரும் இடங்களை அவர்கள் பார்வையிட்டு மனநிறைவுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.





நல்லெண்ணப் பயணமாகவும் இது அமைந்தது. சங்கத்தின் உஸ்தாத். இடையிடையே பயான்- உரை மூலம், அன்னையரின் மாண்பு பற்றியும், அவர்களுக்கு இஸ்லாம் அளித்திருக்கும் சிறப்பு குறித்தும் எடுத்துரைத்தார். சுல்தான் பள்ளிவாசலில் ளுஹர்-மதியத் தொழுகை ஜமாஅத்தாக நடத்தப்பட்டது. இதுபோன்று இல்லங்கள்தோறும் தொழுகை நடத்தப்பட்டு தத்தம் பிள்ளைகளுக்கு நல்லொழுக்க போதனை கற்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மனநிறைவும் மகிழ்வும் தரும் இத்தகைய நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெற்றால் மட்டிலா மகிழ்ச்சியும் நற்பயனும் அடைவோம் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக அமைந்தது.

அல் ஹைர் இஸ்லாமியப் பிள்ளை வளர்ப்புப் பகுதி

# அல்லாஹ் என்னை காப்பாற்றுவானம்மா

‘அம்மா, உங்களுக்கு நபி யூனுஸ் மீன் வயிற்றில் இருந்த கதை தெரியுமா?’ என்ற கேள்வியை எனது ஐந்து வயது மகள் கேட்டபோது, ஆச்சரியத்தில் என் கண்கள் பிதுங்கின.

‘...ம்...ம் அது என்ன கதை? நீ சொல், நான் கேட்கிறேன்’ என்றேன். அவளும் கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

நபி யூனுஸை அல்லாஹ் நபியாக ஒரு சமுதாயத்திற்கு அனுப்பி, அந்தச் சமுதாயம் இஸ்லாத்தை ஏற்க மறுத்து, அதன் விளைவாக அவர் வேதனையடைந்து, அச்சமூகத்தினரை விட்டு விலகிச் சென்று, மீன் வயிற்றில் அடைக்கலம் புகுந்து, அல்லாஹ் அவரை மன்னித்து காப்பாற்றிய வரலாற்றை என் மகள் மூச்சு விடாமல் அழுத்தம் திருத்தமாக கூறினனள்.

என்னால் நம்ப முடியவில்லை! தொடக்கப்பள்ளியில் மொழி பாடங்களுக்குப் பயன்படுத்தப்படும் பெரிய புத்தகங்கள் (Big Books) போல் KidsAlive பாடத்திட்டத்தில் பெரிய புத்தகங்கள் இல்லை. அப்படி இருக்க, வெறும் சொற்களால் சொன்ன கதையா, என் மகளின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது, என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது. அதை என் மகளிடம் கேட்டபோதுதான், எனக்கு உண்மை விளங்கியது.

ஆசிரியர் தற்போது தொடக்கப்பள்ளியில் பயன்படுத்தி வரும் ‘SEED’ (Strategies For Effective Engagement & Development of Pupils) அணுகுமுறையைப் பயன்படுத்தி, KidsAlive பாடங்களை நடத்துவதால், இளம்பிஞ்சுகளின் மனத்தில் நமது நபிமார்களின் வாழ்க்கையில் நடந்தேறிய சம்பவங்கள் எளிதில் பதிந்துவிடுகின்றன.

நபி யூனுஸௗம் மீனும் என்ற பாடத்தை நடத்தும்போது, ஆசிரியர் ஐந்து வயது மாணவர்கள் தனித்தனியே உள்ளே செல்லும் அளவிற்கு, அட்டைப்பெட்டியால் செய்த ஒரு மீனையே செய்து, வகுப்பிற்குக் கொண்டு வந்துள்ளார். பிறகு, ஒவ்வொரு மாணவரையும் அம்மீனின் வயிற்றினுள் ஒரு சில வினாடிகள் இருக்குமாறு கூறி, வகுப்பறையின் மின் விளக்குகளை அணைத்துவிட்டார். நபி யூனுஸ் அன்று உணர்ந்த உணர்வுகளை மாணவர்கள் இனறு உணரும்படி தத்ரூபமாகப் பாடம் நடத்தப்பட்டுள்ளது.

அல்லாஹ் எங்கும், எப்போதும், நம்மைப் பார்த்துக் கொண்டும், நம் கூக்குரலைக் கேட்டுக்கொண்டும் இருக்கின்றான், பிரச்சினை என்றவுடன் துவண்டுவிடாமல், அல்லாஹ்விடம் உதவி நாட வேண்டும், கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் ஆகிய படிப்பனைகளை இந்த ஒரு கதை வழி, ஆசிரியர் சிறப்பாகப் பாடம் நடத்தி, மாணவர்களின் மனத்தில் பசுமரத்தாணி போல், பதிந்துவிடும்படி செய்துள்ளார்.

“நீ மீனின் வயிற்றினுள் போனபோது, உனக்கு எப்படி இருந்தது? நீ அழுதாயா?” என்று நான் என் மகளிடம் கேட்டபோது, என் மகள், “ஆமாம் அம்மா, ரொம்ப பயமாகத் தான் இருந்தது. ஆனால், நான் அழவில்லை. ஏன்னா... எனக்குத் தெரியும். நிச்சயம் அல்லாஹ் என்னைக் காப்பாற்றுவான், அதனால் நான் கொஞ்சம் தைரியமாகத்தான் இருந்தேன், அம்மா!” என்று பதிலைக் கேட்டபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

- மஜினா ரோசியா அப்துல்லாஹ்



# ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் மார்க்கக் கல்விப் பணிகள்

ஹஜ்ஜா பாத்திமா பள்ளிவாசல் சிங்கப்பூரின் பழமைச் சிறப்புடைய பள்ளிவாசல்களில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இப் பள்ளிவாசல் அமைந்துள்ள பீச் ரோடு- நார்த் பிரிட்ஜ் ரோடு வட்டாரத்தில் இந்திய முஸ்லிம் சமூகத்தினர் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது வரலாற்றுப் பதிவு.

இப்பகுதியில் மார்க்கக் கல்வி கற்பிக்கும் பள்ளி- மத்ரஸா இல்லையே என்ற மனக்குறை இந்திய முஸ்லிம்களுக்கு இருந்து வந்தது. தமிழ் முஸ்லிம் ஜமாஅத் 1982-ல் அந்தக் குறையை அகற்றியது. வணிகர்கள், செல்வந்தர்கள் உதவியுடன் கடையநல்லூரிலிருந்து முஹம்மது யூசுப் ஹஜ்ரத் அழைக்கப்பட்டு, அல் மதரஸதுல் காதிரிய்யா தொடங்கப்பட்டது 25 மாணவர்கள் மார்க்கக் கல்வி பயின்றனர். அந்த எண்ணிக்கை பின்னர் 100 ஆக உயர்ந்தது. பத்தாண்டு சேவைக்குப் பிறகு சற்று தொய்வு ஏற்பட்டதால் ஐக்கிய முஸ்லிம் சங்கம் 1995-ல் புத்தாக்கப் பணிகளை மேற்கொண்டது.சங்கத்தின் பொருளாளர் முஹம்மது இக்பாலும் செயற் குழுவினரும் முனைப்பான முயற்சியில் ஈடுபட்டனர்.

அல் மதரஸதுல் காதிரிய்யா மேலும் இரு பள்ளிவாசல்களில் வகுப்புகளை விரிவுபடுத்தியது.தற்போது மாணவர் எண்ணிக்கை சுமார் 180. முழுநேர ஆசிரியர் இருவரும், பகுதி நேர ஆசிரியர் இருவரும் நாள்தோறும் வகுப்பு நடத்துகின்றனர். ஆண்டுதோறும் விழா நடத்தப்படுகிறது. போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படுவதுடன், கல்விச் சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

தியோங் பாருரோடு ஜாமியா அர்ராபிதா பள்ளிவாசலில் 6.1.2007 முதல் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் வகுப்புகளில் 70-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். அதே பள்ளிவாசலில் 5.6. 07 முதல் செவ்வாய்க்கிழமை தோறும் இரவு 7.30 மணியிலிருந்து 9.30 வரை பெரியவர்களுக்கான திருக்குர்ஆன் வகுப்பை ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் நடத்திவருகிறது.

யூனூஸ் தாருல் அமான் பள்ளிவாசலில் பயிலும் மாணவர்களின் பெற்றோர், மற்றும் அவ் வட்டாரவாசிகளுக்கு சன்மார்க்க சொற்பொழிவுகளையும் சங்கம் நடத்தியது.

கடந்த ரபியுல் அவ்வல் மாதம் அல் அமீன் பள்ளிவாசலில் நடைபெற்ற கிராஅத் போட்டியில் 12 வயதுக்குட்பட்ட மாணவியர் பிரிவில், நஸ்ரீன் பானு முதல்நிலையில் வென்றார். முஃப்தி அவர்களிடமிருந்து அந்த மாணவி 150 வெள்ளி தொகையும், தங்கப்பதக்கமும் பெற்றார். அதே பிரிவின் 4 மற்றும் 5ஆம் பரிசுகளை தனது இரு மாணவர்களும் இரு மாணவிகளும் வென்றதாக சங்கம் தெரிவித்தது.

ரபியுல் அவ்வல் மாதம் மாணவர்களை ஒன்று திரட்டி அர் ராபிதா பள்ளிவாசலில் மீலாது விழாவை சங்கம் நடத்தியது. மவ்லூதுடன் மீலாது சொற்பொழிவும் இடம் பெற்றது.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் மற்றொரு நற்பணியாக ஹஜ். உம்ரா பயணிகளுக்கு 8 வகுப்புகள் தமிழில் நடத்தப்பட்டன. ஜாமியா அர் ராபிதா பள்ளிவாசல் ஆதரவுடன் 3 ஏப்ரல் 2007 முதல் மே 29 வரை, மக்ரிப் தொழுகைக்குப் பிறகு இரவு 9.30 மணி வரை, இந்த வகுப்புகளை சங்கத்தின் உஸ்தாத் ஜமாலி முஹம்மது நடத்தினார். பயண முகவர்களின் தொடர்பு இல்லாமல், கட்டணம் எதுவும் பெறாமல் நடத்தப்பட்ட இவ்வகுப்பில் கடந்த ஜுன் மாதம் உம்ராவுக்குச் செல்லவிருந்த சுமார் 20 பேர் கலந்து கொண்டனர்.



# ரமலான் மாத இஃப்தார் நிகழ்ச்சி

